மாலை முரசு

பக்கங்கள் 15

முழக்கம்: 01 வள்ளுவ ஆண்டு 2054 ஆவணி 22 வெள்ளிக்கிழமை 08.09.2023 அதிர்வு 39

## யாழ். பல்கலை மாணவர்கள் இருவர் கைது!



வீதியில் செல்வோரிடம் தொலைபேசிகளைத் திருடியவர்கள் என்ற குற்றச்சாட்டில் யாழ்ப்பாணம் 05



# அடுத்த அறகலய இரத்த வெள்ளம்

## சந்திரிகா அம்மையார் எச்சரிக்கை

“அடுத்தஅறகலயநிம்மதியாக இருக்காது. அது இரத்த வெள்ளமாக இருக்கும். மக்களின் கோபத்தைக் குறைத்து மதிப்பிடாதீர்கள்.”

- இவ்வாறு அரசுக்கு எச்சரிக்கை விடுத்தார் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டார நாயக்க குமாரதுங்க. 04

## ஜி-20 உச்சி மாநாடு டில்லியில் நாளை கோலாகலமாக ஆரம்பம்



உலகின் அதிகாரம் மிகுந்த அமைப்புகளில் ஒன்றான ஜி - 20 அமைப்பின் அரச தலைவர்கள் உச்சி மாநாடு இந்தியாவில் நாளை ஆரம்பமாகின்றது. 04




## கெஹலியவின் தலை இன்று மாலை தப்புமா?

சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெலவுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை மீதான வாக்கெடுப்பு இன்று மாலை நடைபெறவுள்ளது.

நம்பிக்கையில்லாப் பிரேரணை மீது கடந்த இரண்டு நாள்களாக விவாதம் நடைபெற்று வந்த நிலையில் இன்று மூன்றாவது நாளாகவும் விவாதம் இடம்பெற்று, மாலை வாக்கெடுப்பு நடத்தப்படும். 04

## பாதுகாப்பு நிலைவர மீளாய்வு பற்றிய ரணிலின் யோசனை அமைச்சரவையில்



தேசிய பாதுகாப்புக் கொள்கை தயாரிப்பின் முதற்கட்டமான “பாதுகாப்பு நிலவர மீளாய்வு - 2030” என்ற யோசனையை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அமைச்சரவையில் சமர்ப்பித்துள்ளார். 04

## என்னை முடக்கும் சதி படுதோல்வியடையும்

### அமைச்சர் கெஹலிய சூளுரை

“அமைச்சரவையில் இருந்தும், அரசியலில் இருந்தும் என்னை முடக்க எதிர்க்கட்சி வகுத்துள்ள சதித் திட்டம் இன்று மாலை படுதோல்வியடையும்.” 04

## யாழில் குளவிக் கொட்டு ஐவர் வைத்தியசாலையில்



எஸ்.நிதர்ஷன்

யாழ்ப்பாணம் – பலாலி கிழக்கு பகுதியில் இன்று குளவிக் கொட்டுக்கு இலக்காகி 5 பேர் காயமடைந்துள்ளனர். 05



## ஈஸ்டர் தாக்குதல் மீள் விசாரணையை ஷானி அபேசேகரவிடம் ஒப்படைக்குக

### ரணிலிடம் சஜித் கோரிக்கை



உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் தொடர்பான மீள் விசாரணையை ஷானி அபேசேகரவிடம் ஒப்படைக்குமாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் கோரிக்கை 04



# கை அகற்றப்பட்டமைக்கு நீதி விசாரணை தேவை!

## இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் கோரிக்கை

யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை மாணவியின் கை அகற்றப்பட்டமை தொடர்பில் நீதி விசாரணை செய்யப்பட வேண்டியது அவசியம்.

இவ்வாறு இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

இது தொடர்பில் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் வெளியிட்ட செய்தி குறிப்பில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு–

யாழ். இந்து ஆரம்பப் பாடசாலையில் கல்வி பயிலும் சகல துறையிலும் ஆர்வமுள்ள மாணவியின் கை அகற்றப்பட்டமை தொடர்பில் முறையான நீதி விசாரணை நடத்தப்பட வேண்டும்.

கல்வியிலும், இணைப்பாட விதான செயற்பாடுகளிலும் மிகுந்த ஆர்வமும் திறமையுமுள்ள குழந்தை மாணவிக்கு யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் நடைபெற்ற சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

இது திட்டமிட்ட செயல் அல்லாவிட்டாலும் மருத்துவத்துறைக்கு இழுக்கான விடயமாகும்.

இதனை சர்வ சாதாரணமாக விட்டுவிட முடியாது. குழந்தையின் கை அகற்றப்பட்டமை அக்குழந்தையின் வாழ்க்கையை கேள்விக்குறியாக்கியுள்ளது.

இதற்கு மாற்றுவழி என்ன? என்பதை எவருமே தேட முடியாத அளவுக்கு துயரம் நடைபெற்றுள்ளது. இது போன்ற தவறுகள் இனியும் நடைபெறக்கூடாது என்பதற்காக முறையான நீதி விசாரணை நடத்தப்பட்டுத் தவறுக்குத் தண்டனை வழங்கப்பட வேண்டும். – என்றுள்ளது.



# யாழ் நகரத்தில் 2 மாதங்களில் 13 மோ.சைக்கிள்கள் திருட்டு

யாழ் நகர் பகுதியில் கடந்த இரண்டு மாத கால பகுதிக்குள் 13 மோட்டார் சைக்கிள்கள் களவாடப்பட்டுள்ளன.

யாழ். போதனா வைத்தியசாலை சூழல், மத்திய பஸ் நிலையத்தைச் சூழவுள்ள பகுதி ஆகிய இடங்களில் நிறுத்தி வைக்கப்பட்ட மோட்டார் சைக்கிள்களே களவாடப்பட்டுள்ளன.

களவாடப்பட்ட மோட்டார் சைக்கிள் உரிமையாளர்களால் யாழ். பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடுகள் செய்யப்பட்ட போதிலும் திருட்டு கும்பல்கள் கைது செய்யப்படவில்லை.

இந்தத் திருட்டுக் கும்பல்கள் வலையமைப்பாக செயற்பட்டு வருகின்றன எனவும், திருடப்படும் மோட்டார் சைக்கிள்களை உதிரி பாகங்களாக கழற்றி விற்பனை செய்வதனால், திருடப்பட்ட மோட்டார் சைக்கிள்களை மீட்கவோ, திருட்டு கும்பல்களை கைது செய்வோ பெரும் சவால்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளது எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்நிலையில் நேற்று முன்தினம் புதன்கிழமை யாழ்.நகர் மத்தியில் உள்ள வங்கி ஒன்றின் முன்பாக நிறுத்தப்பட்டிருந்த மோட்டார் சைக்கிளை திருடி, திருடன் உருட்டி செல்வது வங்கியில் பொருத்தியிருந்த கண்காணிப்பு கமராவில் பதிவாகியுள்ளது.

குறித்த காணொலிக் காட்சியை அடிப்படையாக கொண்டு யாழ்ப்பாண பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளமையுடன், திருடனை அடையாளம் கண்டுள்ளனர் எனவும், கைது செய்வதற்கு நடவடிக்கை எடுத்துள்ளன எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

# பிரச்சினைகளுக்கு உரிய தீர்வுகளை காண முடியும்!

## முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ஹக்கீம் நம்பிக்கை



இது ஒரு நிலைமாறு காலம். தற்போதைய நெருக்கடியான சூழ்நிலையில், சமூகமும், கட்சியும் பல்வேறு சவால்களுக்கு முகம் கொடுக்க நேர்ந்துள்ளன. பிரச்சினைகளுக்குத் தீர்வுகளைக் காண முடியும் என்ற நம்பிக்கை உள்ளது.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அட்டாளைச்சேனை, பாலமுனை, ஒலுவில் ஆகிய பிரதேசங்களுக்கான முஸ்லிம் காங்கிரஸ் மத்திய குழுக்களுக்கான உறுப்பினர்கள் மற்றும் ஆதரவாளர்கள் மத்தியில் அண்மையில் உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார் .

கட்சியின் மறைந்த ஸ்தாபகத் தலைவர் எம்.எச்.எம். அஷ்ரபின் 23 ஆவது நினைவு தின நிகழ்வு எதிர்வரும் 16 ஆம் திகதி சாய்ந்த மருதில் நடைபெறவுள்ளது.

இதனை முன்னிட்டும், கட்சியின் கட்டமைப்பைத் தொகுதிவாரியாக புனரமைப்பது தொடர்பிலும் முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ஹக்கீம் வார இறுதி நாள்களில் கள விஜயமொன்றை மேற்கொண்டு, அம்பாறை மாவட்டத்துக்குச் சென்றிருந்தார்.

அட்டாளைச் சேனையில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் உரையாற்றியபோது முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ஹக்கீம் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு–

நாங்கள் ஒற்றுமைப்பட வேண்டும். முஸ்லிம்கள் ஒற்றுமைப்பட்டு விட்டால், பெரிய கட்சிகளின் தயவில் தொடர்ந்தும் தங்கி இருக்க வேண்டிய அவசியமில்லை. அதற்காக வேற்றுமைகளுக்கு மத்தியிலும் ஒற்றுமைப் பட வேண்டும். இது ஒரு நிலைமாறு காலம். இந்த நெருக்கடியான சூழ்நிலையில், பல்வேறு சவால்களுக்கு சமூகமும், கட்சியும் முகம் கொடுக்க நேர்ந்திருக்கிறது. ஆனால், பிரச்சினைகளுக்குத் தீர்வுகளைக் காண முடியுமென்ற நம்பிக்கை இருக்கின்றது.

முன்னாள் அமைச்சரும் கிழக்கு மாகாண ஆளுநருமான எம்.எல்.ஏ. எம் .ஹிஸ்புல்லாஹ்வின் மீள் வருகை, கட்சி ஒன்றுபட்டு விட்டது என்றதொரு தோற்றப்பாட்டை ஏற்படுத்தி இருக்கிறது. கட்சி எப்பொழுதும் பலமாக இருக்க வேண்டும். தகுந்த காரணங்களைப் பொறுத்து உறுப்பினர்கள் மீண்டும் உள்வாங்கப்பட வேண்டும். தலைவர்கள் மலிந்து போய் விட்டார்கள். இந்த நிலைமை மாறி, கட்சிக்கு ஒரு பரந்துபட்ட நிலைப்பாடு இருக்க வேண்டும். கட்சியில் மீள் இணைபவர்களை பயனுள்ள மூலதனமாகக் கருத வேண்டும். அவர்களைக் கொண்டு நன்மையடைய வேண்டும்.

கட்சியைப் பொறுத்தவரை சிலரின் நடவடிக்கைகள் காரணமாக மக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள அவநம்பிக்கை களையப்படுவதோடு, அவர்களிடத்தில் நம்பிக்கையை கட்டியெழுப்ப வேண்டும். அவர்களில் சிலரிடமுள்ள விரக்தி மனப்பான்மையைப் போக்க வேண்டும். இந்த ஆட்சியில் மக்கள் அதிக கஷ்டங்களை அனுபவித்து வருகின்றனர். வாழ்க்கைச் செலவு அதிகரிப்பு, பொருளாதார நெருக்கடி என்பவற்றால் மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள்.

தேர்தல்களை நடத்தும் நோக்கம் அரசுக்கு இல்லை. தேர்தலை நடத்தினால் தோற்றுப் போவார்கள் என்ற எண்ணப்பாட்டில் அதனைக் காலம் தாழ்த்திக் கொண்டு போகின்றார்கள். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க எந்த திருகுதாளத்தைச் செய்தாவது தேர்தல்களை நடத்தாமல் இழுத்தடிக்கும் நிலைப்பாட்டிலேயே இருந்துவருகின்றார். காலப்போக்கில் மக்களும் கூட, அதற்கு இப்பொழுது இசைவாக்கம் அடைந்து விட்டனர் என்பது போல் தெரிகின்றது.

இவ்வாறான சூழ்நிலையில் எமது கட்சியை பொறுத்தவரை நாங்கள் எங்களுக்குள்அதிகாரப் போட்டியை கைவிட்டு, கட்சியை வளர்ப்பதற்கு மனப்பூர்வமாக முன்வர வேண்டும். எந்த கட்சியை எடுத்தாலும் அதிகாரத்துக்கு வருவதற்கு தான் ஒவ்வொருவரும் ஆசைப்படுகிறார்கள். எங்கள் கட்சியிலும் அதிகார போட்டி இருந்தாலும் கூட ,பிரதேச சபை மட்டத்திலும் மாகாண சபை மட்டத்திலும் பாராளுமன்ற தேர்தலிலும் போட்டியிட்டு வெற்றி பெறக் கூடிய நிறைய வாய்ப்புகள் எமது உறுப்பினர்களுக்கு இருந்து வருவதை நினைவூட்ட விரும்புகின்றேன் .

சில இடங்களுக்கு எம்.பிமார் வர முடியாத நிலையிருந்தது. அவர்களுக்கு வேலி கட்டாதீர்கள். அவர்களைப் பயன்படுத்தி ஊருக்கு தேவையானவற்றை செய்து கொள்ளுங்கள். தேர்தல் என்று வரும்போது ஏனையவற்றை கட்சியே தீர்மானிக்கும்.

ஆளும் கட்சியில் இருந்தால் மட்டுமல்ல, எதிர்க்கட்சியில் இருந்தாலும் கூட, முஸ்லிம்களின் ஆளும் கட்சி முஸ்லிம் காங்கிரஸ்தான் என்பதை நான் அடிக்கடி வலியுறுத்தி வந்திருக்கின்றேன் என்றார் .

முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ஹக்கீம் அம்பாறை மாவட்டத்தில் இறக்காமம், வரிப்பத்தான்சேனை, சம்மாந்துறை, சாய்ந்தமருது, பொத்துவில், அட்டாளைச் சேனை , ஒலுவில், பாலமுனை , நிந்தவூர், மாளிகைக் காடு, மாவடிப்பள்ளி , நற்பிட்டிமுனை, மருதமுனை மத்தியமுகாம், ஆகிய பல்வேறு பிரதேசங்களுக்கும் சென்று மத்திய குழு உறுப்பினர்களையும் ஆதரவாளர்களையும் சந்தித்தார். அவர்களின் கருத்துக்களையும் கேட்டறிந்தார்.

இந்த கலந்துரையாடல்களில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினர்களான பைசல் காசிம், எச் .எம் .எம் ஹரீஸ் எம் எஸ் தௌபீக் , முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான எம்.எல்.ஏ .எம் ஹிஸ்புல்லாஹ் , எம்.ஐ.எம்.மன்சூர், செய்யித் அலி சாஹிர் மௌலானா, முன்னாள் கிழக்கு மாகாண அமைச்சர் எம். எஸ்.உதுமாலெப்பை, முன்னாள் கல்முனை மேயர் சிராஸ் மீராசாஹிப், கட்சியின் பிரதிச் செயலாளர் மன்சூர் ஏ. காதிர், பிரதி பொருளாலர் ஏ.ஸீ.யஹ்யாகான் ஆகியோர் உட்பட கட்சியின் முக்கியஸ்தர்கள் பலர் கலந்து கொண்டனர்.

# முதலாம் பக்கத் தொடர்ச்சி

**கெஹலியவின்**

நம்பிக்கையில்லாப் பிரேரணையை நிறைவேற்றிக்கொள்வதற்குப் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியும் தீவிரம் காட்டி வருகின்றது. நாடாளுமன்றத்தில் சுயாதீனமாகச் செயற்படும் உறுப்பினர்களுடன் பேச்சு நடத்தப்பட்டு வருகின்றது.

அதேவேளை, ஆளுங்கட்சியும் பேச்சுக்களை முன்னெடுத்து வருகின்றது.

---

**ஜி-20 உச்சி மாநாடு...**

ஜி - 20 அமைப்பின் தலைமை பதவியை இம்முறை இந்தியா வகிக்கின்றது. இதன்படி இந்தியாவின் தலைமையில், பல்வேறு நகரங்களில் ஜி - 20 பிரதிநிதிகள் பங்கேற்ற பல்வேறுதுறை சார்ந்த கூட்டங்கள் நடைபெற்றன.

இதன் தொடர்ச்சியாக ஜி - 20 அரச தலைவர்கள் உச்சி மாநாடு டில்லியில் நாளையும் (சனிக்கிழமை), நாளை மறுநாளும் (ஞாயிற்றுக்கிழமை) நடைபெறுகின்றது.

இந்தியா தலைமை தாங்கி நடத்தும் இந்த உச்சி மாநாட்டில் பங்கேற்க உறுப்பு நாடுகளின் தலைவர்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. இதைப்போல் உறுப்பினர் அல்லாத பல்வேறு நாடுகளும் சிறப்பு அழைப்பாளர்களாகப் பங்கேற்கின்றன.

உலக வல்லரசு நாடுகள் உட்பட முக்கியமான நாடுகளின் தலைவர்கள் பங்கேற்வுள்ளமையால், இதற்காகத் தலைநகரில் பிரமாண்ட ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. மிகுந்த உத்வேகத்துடன் ஜி - 20 உச்சி மாநாட்டுக்கான தயாரிப்புகளையும் அரசு இறுதி செய்து வருகின்றது.

பிலிப்பைன்சில் இருந்து மாநாட்டில் பங்கேற்க ஆஸ்திரேலியாப் பிரதமர் டில்லி செல்கின்றார். அமெரிக்கா ஜனாதிபதியும் இன்று இந்தியா வருகின்றார்.

---

**அடுத்த அறகலய**

சிங்களத் தொலைக்காட்சியொன்றுக்கு வழங்கிய நேர்காணலிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில் -

"ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் சப்பாத்தாக நான் இருந்திருந்தால் கூட பொதுத் தேர்தலுக்கு உத்தரவிட்டிருப்பேன். தோல்விப் பயம் காரணமாக ரணில் விக்கிரமசிங்க தேர்தலுக்குச் செல்லவில்லை.

நாட்டின் வீழ்ச்சியை ரணில் விக்கிரமசிங்கவால் விரைவாகத் தடுத்து நிறுத்த முடிந்தது. ஆனால், ஊழல் அரசியல்வாதிகளுடன் இணைந்து பணியாற்றியதால் அவரால் முன்னேற முடியவில்லை.

ஊழல் குடும்பத்தைச் சேர்ந்தவர்களே அரசில் உள்ளார்கள். ரணில் திருடுகின்றார் என்று நான் நினைக்கவில்லை. ஆனால், அவரைச் சுற்றியுள்ள அனைவரும் திருடுகின்றார்கள்.

உதாரணத்துக்குச் சுகாதார அமைச்சரைப் பாருங்கள். அவரின் அமைச்சில் ஊழல், மோசடி இடம்பெற்றுள்ளது. இறக்குமதி செய்யப்பட்ட தரமற்ற மருந்துகளால் மக்கள் இறந்துள்ளார்கள் என்பது அனைவருக்கும் தெரியும். சுகாதார அமைச்சர் ஹெகலிய ரம்புக்வெலவை உடனடியாகக் கைது செய்ய வேண்டும். அவரை அமைச்சுப் பதவியில் இருந்து மட்டுமல்லாமல் நாடாளுமன்றத்திலிருந்தும் அகற்ற வேண்டும். அவருக்கு எதிராக எதிர்க்கட்சிகள் வலுவான பிரேரணைகளைக் கொண்டு வர வேண்டியிருக்கிறது.

ஊழல், மோசடியே நாட்டைப் பின்னுக்குத் தள்ளும். இவ்வாறான ஊழல், மோசடி வஞ்சகர்கள் அதிகாரத்தில் உள்ளார்கள்.

மக்கள் கோபமாக இருக்கின்றார்கள். கோட்டாபய ராஜபக்ஷவின் விலகலுக்குப் பின்னர் அவர்கள் எதிர்பார்த்தது நிறைவேறவில்லை. அடுத்த அறகலய நிம்மதியாக இருக்காது. அது இரத்த வெள்ளமாக இருக்கும். மக்களின் கோபத்தைக் குறைத்து மதிப்பிடாதீர்கள்." - என்றார்.

---

**ஈஸ்டர் தாக்குதல்...**

விடுத்தார்.

நாடாளுமன்றத்தில் இன்று உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"தற்போது கொழும்பு பிரதேசத்தில் பாரபட்சமின்றி வெளிப்படைத் தன்மையுடன் செயற்படும் பல நீதிபதிகள் இடமாற்றம் செய்யப்படும் நிலை காணப்படுகின்றது. இந்த விடயம் தொடர்பில் பக்கச்சார்பற்ற முறையில் ஆராயுமாறு சபாநாயகரிடம் கோருகின்றேன்.

இலத்திரனியல் ஊடகங்கள், அச்சு ஊடகங்கள் மற்றும் சமூக ஊடகங்களை நசுக்குவதற்கு அரசு முயற்சித்து வருகின்றது. ஊடகங்கள் சுயக்கட்டுப்பாட்டைப் பேணுவது மிகவும் அவசியம். அவ்வாறே, அரசு ஊடகங்களை நசுக்குவது சர்வாதிகார இயல்பு.

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதலின் உண்மைத் தன்மை மீண்டும் மீண்டும் வெளிப்பட்டுக் கொண்டிருக்கின்றது. இந்தத் தாக்குதல் தொடர்பான மீள் விசாரணையை இது தொடர்பான அறிவும் அநுபவமும் உள்ள ஷானி அபேசேகரவிடம் ஒப்படைக்க வேண்டுமென ஜனாதிபதியிடம் கோருகின்றேன்.

2019 ஆம் ஆண்டு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவுக்கு இந்த உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதலை விசாரிக்கவே மக்கள் ஆணை வழங்கினார்கள்.

எமது நாட்டில் வெளிப்படையான மற்றும் பக்கச்சார்பற்ற விசாரணைகள் மேற்கொள்ளப்படாவிட்டால் சர்வதேச விசாரணை நடத்தப்பட்டு பாதிக்கப்பட்ட அனைவருக்கும் நீதி கிடைக்க வேண்டும்.

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதலைப் பயன்படுத்தி ஜனாதிபதிப் பதவியைப் பெற்று, அரசு அமைத்து, அமைச்சுப் பதவிகளையும் பெற்று இன்று இது பற்றி தவறான கருத்துக்களை வெளியிடுவதில் அர்த்தமில்லை. எங்களுக்கு உண்மை மட்டுமே வெளிப்பட வேண்டும். சேறுபூசும் அரசியலில் ஈடுபட நாங்கள் தயாராக இல்லை.

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் தொடர்பில் உரிய முறையில் விசாரணை நடத்திய ஷானி அபேசேகர சிறையில் அடைக்கப்பட்டதன் மூலம் சில விடயங்கள் பற்றிய உண்மை புலப்படுகின்றது. இந்தத் தாக்குதல் தொடர்பான மீள் விசாரணையை கைவிலங்குகள் இல்லாமல், கழுத்தில் கயிறுகள் பிணைக்கப்படாமல் ஷானி அபேசேகரவிடம் வழங்குமாறும் ஜனாதிபதியைக் கோருகின்றேன்."

- என்றார்.

---

**என்னை முடக்கும்...**

- இவ்வாறு சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெலவுக்கு எதிராகப் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்திருந்த நம்பிக்கையில்லாப் பிரேரணை மீதான வாக்கெடுப்பு இன்று மாலை நடைபெறவுள்ளது. இது தொடர்பில் கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

"சுகாதார அமைச்சருக்கு எதிராக எதிரணி முன்வைத்துள்ள குற்றச்சாட்டுக்கள் ஏற்க முடியாதவை. நாட்டின் தற்போதைய நிலைமை அறியாது எதிரணி செயற்படுகின்றது.

எனக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை பெரும்பான்மை வாக்குகளால் இன்று முறியடிக்கப்படும். எமது அரசின் பெரும்பான்மைப் பலம் இன்று மீண்டும் நிரூபித்துக் காட்டப்படும்" - என்றார்.

---

**பாதுகாப்பு நிலவரை...**

இலங்கையின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கான நியதிகளுக்கமைய சவால்களை எதிர்கொள்வதற்கான மாற்று அணுமுறைகள் தொடர்பில் ஆராய்ந்து அறிக்கையிடுவதற்காக "பாதுகாப்பு நிலவரை மீளாய்வு - 2030" அவசியப்படுகிறது. அதன்படி இந்த மீளாய்வு மாநாட்டில் 2023 வரையான மற்றும் அதன் பின்னரான அணுகுமுறைகள் தொடர்பிலும் ஆராயப்படவுள்ளது.

அதற்கமைய,

* 2030 இல் இலங்கையின் மூலோபாய அறிவு மற்றும் சவால்கள்
* இலங்கையின் பாதுகாப்பு முக்கியத்துவம்
* 2030 பாதுகாப்பு கொள்கையின் நோக்கங்கள்
* மூலோபாய சவாலை எதிர்கொள்ளும் இயலுமை மற்றும் வலு
* தற்போதுள்ள நிதி நிலைமைக்கு ஏற்ப அவசர தேவைகளுக்கு முன்னுரிமை அளித்தல்

- உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் கவனம் செலுத்துதல்.

இதற்காக மேஜர் ஜெனரல் சன்ன குணதிலக்க (ஓய்வு) தலைமையிலான, மீளாய்வுக்குழு நியமிக்கப்பட்டிருப்பதோடு, அந்த குழுவில் ரியர் அட்மிரல் ஜே.ஜே. ரணசிங் (ஓய்வு), மேஜர் ஜெனரல் ஜீ.ஆர். வணிகசூரிய (ஓய்வு), எயார் வைஸ் மார்ஷல் எண்ட்ரூ விஜேசூரிய (ஓய்வு), சஷிகலா பிரேமவர்தன (இலங்கை வெளிநாட்டுச் சேவை), டேனியல் அல்போன்ஸ் (ஆலோசகர்- நிதி, பொருளாதார நிலைப்படுத்தல் மற்றும் தேசிய கொள்கை அமைச்சு) ஆகியோரும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

சேவையிலிருக்கும் முப்படை அதிகாரிகள், வெளிநாட்டு சேவை அதிகாரிகள், திறைசேரி அதிகாரிகள், நிபுணர்கள் மற்றும் ஜனாதிபதியினால் நியமிக்கப்படவுள்ள செயலாளர் ஒருவரும் பணிக்குழுவும் அதற்காக ஒத்துழைப்புக்களை வழங்கவுள்ளது.

# யாழ்.பல்கலை ஊடக ஆய்வு கூடத்துக்கு இந்தியத் துணைத் தூதர் நேரடி விஜயம்



யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தின் ஊடக ஆய்வு கூடத்துக்கு யாழ்ப்பாணத்துக்கான இந்தியத் துணைத் தூதுவர் ராகேஷ் நட்ராஜ் ஜெயபாஸ்கரன் விஜயம் செய்தார்.

யாழ்ப்பாணம் ஜ/ம்மா பள்ளி வீதியில் உள்ள யாழ். பல்கலைக்கழகத்தின் ஊடக ஆய்வு கூடத்துக்குக் கடந்த செவ்வாய்க்கிழமை சென்ற இந்தியத் துணைத் தூதுவர் ஊடகத் துறையின் மேம்பாடு தொடர்பில் கலந்துரையாடினார்.

யாழ். பல்கலைக்கழக கலைப்பீடத்தின் பீடாதிபதி பேராசிரியர் சி.ரகுராம் ஊடக ஆய்வு கூடத்தின் செயற்பாடுகளை விளக்கியதுடன், ஊடக ஆய்வு கூடத்தில் உள்ள வசதிகள் மற்றும் உபகரணங்கள் தொடர்பாக விபரித்தார்.

மாணவர்களுடன் உரையாடலில் ஈடுபட்ட இந்தியத் துணைத் தூதுவர் கற்கைகள் தொடர்பான மாணவர்களின் தயாரிப்புகளைப் பாராட்டியதுடன் மாணவர்களுக்கான பயிற்சிகளை நடத்துவதற்கு இந்தியாவில் இருந்து திரைப்பட இயக்குநர்கள் மற்றும் ஊடகவியலாளர்கள் போன்ற வளவாளர்களையும் அழைப்பதற்கான முன்மொழிவை ஊடக கற்கைகள் துறை சமர்ப்பிக்குமானால் சாதகமாகப் பரீசிலிப்பதாகவும் தெரிவித்தார்.

இதன்போது இந்தியத் துணைத் தூதரக அதிகாரி ரா.நாகராஜன், ஊடக கற்கைகள் துறைத் தலைவரும் சிரேஷ்டவிரிவுரையாளருமானபூங்குழலி சிறீசங்கீர்த்தனன், சிரேஷ்ட விரிவுரையாளர் ஜுட் தினேஷ் கொடுதோர், விரிவுரையாளர் அனுதர்சி கபிலன் மற்றும் ஊடக ஆய்வுகூட ஊழியர்கள், ஊடகத்துறை மாணவர்கள் கலந்து கொண்டனர்.



# வவுனியாவில் அடக்கம் செய்யப்பட்ட 2 வயது குழந்தையின் சடலம் மாயம்!

வவுனியா – இராசேந்திரகுளம் பகுதியில் நல்லடக்கம் செய்யப்பட்ட இரண்டு வயது குழந்தையின் சடலம் காணாமல்போயுள்ளது.

குழந்தையின் தாயாரால் நெளுக்குளம் பொலிஸ் நிலையத்தில் இது தொடர்பில் முறைப்பாடு அளிக்கப்பட்டுள்ளது.

நீர்த் தாங்கி வீழ்ந்தமையால் குறித்த இரண்டு வயது குழந்தை உயிரிழந்த நிலையில் கடந்த மாதம் 26 ஆம் திகதி நல்லடக்கம் செய்யப்பட்டது.

தாயாரால் அளிக்கப்பட்ட முறைப்பாட்டுக்கு அமைய பொலிஸார் மேற்கொண்ட சோதனை நடவடிக்கையின் போது குழந்தையின் சடலம் காணாமல் போயுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை நெளுக்குளம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## முதலாம் பக்கத் தொடர்ச்சி

### யாழ். பல்கலை...

பல்கலைக்கழக மாணவர்கள் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

போதைப்பொருளுக்கு அடிமையாகிய இருவரும் மோட்டார் சைக்கிளில் சென்று வீதியில் செல்வோரிடம் தொலைபேசிகளை அபகரித்து விற்பனை செய்து வந்துள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று யாழ்ப்பாணம், திருநெல்வேலி பகுதியில் வைத்து யாழ்ப்பாணம் பிராந்திய மூத்த பொலிஸ் அத்தியட்சகரின் கீழ் இயங்கும் மாவட்ட குற்றத் தடுப்புப் பிரிவு பொறுப்பதிகாரி தெ.மேனன் குழு இந்தக் கைது நடவடிக்கையை முன்னெடுத்தனர்.

### யாழில் குளவி...

ஐவரும் சிகிச்சைக்காக அச்சுவேலி பிரதேச வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட நிலையில் ஒருவர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணத்தில் தற்போது கடும் காற்றுடன் கூடிய காலநிலை நிலவி வருவதால் மரங்களில் இருந்த குளவிக் கூடு கலைந்து குளவிகள் கூண்டில் இருந்து வெளியேறி தாக்கி இருக்கலாம் எனச் சந்தேகிக்கப்படுகின்றது.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## தேர்தலுக்கு அஞ்சும் ரணில்!

இந்த நாட்டை யுத்த மேகங்கள் சூழ்ந்திருந்த சமயத்தில் - மிக இக்கட்டான காலகட்டத்தில் - பதினொரு வருடங்கள் ஆட்சி செய்தவர் சந்திரிகா குமாரதுங்க. இன்றைய நிலையில் ஒரு மூத்த - அனுபவம் மிக்க - அரசியல்வாதி. தற்போதைய நிலைமைகள் தொடர்பில் அவர் கூறியிருக்கும் சில கருத்துக்கள் அவதானிக்கப்பட வேண்டியவை.

"நாட்டு மக்கள் மிகக் கோபமாக இருக்கின்றார்கள். கோட்டாபய ராஜபக்ஷவின் விலகலுக்கு பின்னர் அவர்கள் ( நாட்டு மக்கள் ) எதிர்பார்த்தவை நிறைவேறவில்லை. அடுத்த அறகலய நிம்மதியாக இருக்காது. இரத்த வெள்ளமாக இருக்கும். மக்களின் கோபத்தைக் குறைத்து மதிப்பிடாதீர்கள்!" - என்று அவர் கூறியிருக்கிறார்.

கடந்த ஆண்டு மக்கள் புரட்சி வெடித்த போது அதைத் தடுக்க இயலாத கோட்டாபய ராஜபக்ஷ தோற்றுப்போன ஜனாதிபதியாக நாட்டை விட்டு ஓடினார்.

அரசியலில் தோற்கடிக்கப்பட்டு, செல்லாக் காசாக இருந்த ரணில் விக்கிரமசிங்க கிடைத்த இடைவெளியில் அரியணை ஏறி, தம்மை அரசியல் ரீதியில் செல்லுபடியாக்கிக் கொண்டு விட்டவராக எண்ணிக் கொண்டார். கிளர்ச்சியைக் கண்டு ஓட்டம் பிடித்த கோட்டாபயவின் பதவி விலகலினால் தனிந்திருந்த மக்களின் அறகலய கிளர்ச்சியை, ஆயுதப் படைகளைக் கொண்டு அடக்கினார் ரணில். மக்கள் கிளர்ச்சிக்கு இனி இடமில்லை, அத்தகைய முயற்சிகள் துளிர் விடும் போதே அடக்கப்படும் என்ற கடுமையான செய்தியை நாட்டு மக்களுக்கு உறைக்கும் விதத்தில் தாம் உணர்த்தி இருக்கின்றார் என்று ரணில் முழுமையாக நம்புகிறார்.

நாட்டின் பெரும்பகுதி மக்கள் தாம் ஒன்று திரண்டு, ஒரே குரலில் ஜனாதிபதியாக்கிய கோட்டாபய ராஜபக்ஷவையே இரண்டரை வருடங்களுக்குள் 'துண்டைக் காணோம், துணியைக் காணோம்' என்று நாட்டை விட்டு ஓட்டம் பிடிக்க வைத்த மக்கள் இலங்கையர்கள்.

மக்கள் செல்வாக்கு இல்லாமல், பின் கதவால் ஆட்சி அதிகாரத்தைப் பற்றிய ரணில் விக்கிரமசிங்க மக்கள் எழுச்சியை - கிளர்ச்சியை - ஆயுதப் படைகளின் பிரசன்னத்தில் அடக்கும் வல்லமையும் திறமையும் தமக்கு இருப்பதாகத் தப்பு கணக்கு போடுகிறார். அதுவே சந்திரிகா அம்மையாரின் பிந்திய பேட்டியில் பிரதான கருத்தம்சமாக அமைந்தது.

"நாட்டின் விரைவான வீழ்ச்சியை ரணில் விக்கிரமசிங்கவினால் தடுத்து நிறுத்த முடிந்தது. ஆனால் ஊழல் அரசியல்வாதிகளுடன் இணைந்து பணியாற்றுகின்றமையால் அவரால் நாட்டை முன்னேற்ற முடியவில்லை.

ரணில் திருடுகின்றார்" என்று நான் நினைக்கவில்லை, ஆனால் அவரைச் சுற்றியுள்ள அனைவரும் திருடுகின்றார்கள்.

"ஊழலே நாட்டை.ப் பின் தள்ளும் முக்கிய பிரச்சனை. வஞ்சகர்களே அதிகாரத்தில் உள்ளமையால் ஊழல் பெருக்கெடுத்து ஓடுகின்றது" - என்று சந்திரிகா அம்மையார் கூறுகிறார்.

அவர் கூறுகின்றமைப் போல தேர்தல் பயத்தினால் ரணில் விக்கிரமசிங்க தேர்தலுக்குப் போக அஞ்சுகின்றார். ஆனால் அதுதான் அவரது வீழ்ச்சிக்கு வழி செய்யப் போகின்றது என்பது வெளிப்படை.

# கொழும்பில் கால்வாய் புனரமைப்புக்கு நிதி!

### 59 லட்சம் ரூபா ஒதுக்கியது திறைசேரி



கொழும்பு நகரம் மற்றும் புறநகர் பகுதிகளில் ஏற்பட்டுள்ள வெள்ளப் பெருக்கைக் கட்டுப்படுத்தும் வகையில் கால்வாய்கள், அணைகள் மற்றும் குளங்களை புனரமைப்பதற்குத் திறைசேரியிலிருந்து இலங்கை காணி மீட்புக் கூட்டுத்தாபனத்துக்கு 59 லட்சத்து 50 ஆயிரம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்கவின் வேண்டுகோளுக்கு இணங்க, திறைசேரி இந்த நிதியை ஒதுக்கியுள்ளது.

கொழும்பு நகரின் பிரதான கால்வாய் 44 கிலோ மீற்றர் அமைக்கப்படவுள்ளது.

ஏரிகள் மற்றும் கால்வாய்களில் பெரும்பாலானவை ஜப்பான் கோர்ஸ் புல் மற்றும் துர்நாற்றம், சேற்று மண், பிளாஸ்டிக் போத்தல்கள், பியர் கேன்கள், செருப்புகள், சுகாதார பொருள்கள், கழிவு நீர் மற்றும் எண்ணெய் போன்றவற்றால் நிரப்பப்பட்டுள்ளன. இதனால், மிகக் குறைந்த மழை பெய்தாலும் கொழும்பு நகரின் பிரதான வீதி வெள்ளத்தில் மூழ்கும் நிலைமை ஏற்பட்டுள்ளது.

எனவே, கொழும்பிலும் அதனைச் சூழவுள்ள பிரதான கால்வாய் அமைப்பு, நீர்த்தேக்கங்கள் மற்றும் அதனை அண்மித்துள்ள உடற்பயிற்சி நடை பாதைகள், குட்டைகள், பூங்காக்கள் ஆகியவற்றின் பராமரிப்பு பணிகளை துரிதப்படுத்துமாறு இலங்கை காணி மீட்புக் கூட்டுத்தாபனத்திற்கு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க பணிப்புரை விடுத்துள்ளார்.

இதன்படி கொழும்புக்கு அருகில் வத்தளை நகரின் ஊடாக பாயும் ஹமில்டன் கால்வாயின் புனரமைப்பு இங்கு மேற்கொள்ளப்பட உள்ளது. ஹமில்டன் கால்வாய் 14.3 கி.மீ நீளத்தைக் கொண்டுள்ளது. நீர் கொழும்பு களப்பிலிருந்து களனி கங்கையின் முகத்துவாரம் வரையிலும், நீர் கொழும்பு களப்பிலிருந்து மஹா ஓயா வரையிலும் இந்த கால்வாய் பராமரிக்கப்பட வுள்ளது.

வெள்ளத்தைக் கட்டுப்படுத்தவும் கொழும்பு நகரையும் அதனை சூழவுள்ள பகுதிகளையும் சுத்தமாகவும் அழகாகவும் வைத்திருக்க இந்த கால்வாய்கள் மற்றும் குட்டைகளை தொடர்ந்து சுத்தம் செய்ய வேண்டும் எனவும் இதற்கு பொது மக்களின் முழு ஆதரவையும் எதிர்பார்க்கிறோம் எனவும் அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

# சம்மாந்துறை வலய மாணவருக்கு மெய்வல்லுனர் பயிற்சி முகாம்



( வி.ரி. சகாதேவராஜா)

சம்மாந்துறை வலய இரு நாள் மெய்வல்லுனர் பயிற்சி முகாம் நேற்று (07) வியாழக்கிழமை மஜித்புரம் முஸ்லிம் மகா வித்தியாலயத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

சம்மாந்துறை வலய உடற்கல்வி உதவிக் கல்வி பணிப்பாளர் ஏ. நசீர் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில், பிரதம விருந்தினராகச் சம்மாந்துறை வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் எம்.வை.யசீர் அறபாத் கலந்து கொண்டார்.

சிறப்பு அதிதிகளாகப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் ஏ.எல்.அப்துல் மஜீத், உதவி கல்விப் பணிப்பாளர்களான வி.ரி.சகாதேவராஜா, ஏ.முஸ்ரக்அலி ஆகியோர் கலந்து கொண்டனர்.

வலய மட்ட விளையாட்டு போட்டிகளில் முதலாம் இரண்டாம் இடம் பெற்ற மாணவர்கள் அனைவருக்கும் இந்த மெய்வல்லுனர் பயிற்சி முகாம் நடைபெற்றது.

எதிர்வரும் 19 ஆம் திகதி மாகாண மட்ட விளையாட்டு போட்டிக்குத் தயார் படுத்தும் முகமாக இந்த முகாம் ஏற்பாடு செய்யப்பட்டது.

இதன் ஆரம்ப விழாவில் விளையாட்டு ஆரோக்கிய தொடர்பான சிறப்புரையை வி.ரி.சகாதேவராஜா நிகழ்த்த பிரதான உரையை பிரதம அதிதி அறபாத் நிகழ்த்தினார்.



# இரு நூல்கள் வெளியீடு நாளை

(அ.அஸ்வர்)

இளவாலை விஜயேந்திரனின் "எந்தக் கங்கையில் இந்தக் கைகளைக் கழுவுவது" எனும் கவிதைத் தொகுப்பு, சஞ்சயன் செல்வமாணிக்கத்தின் "நினைவு மறந்த கதை" எனும் சுவட்டெச்சங்களின் தொகுப்பு ஆகிய இரு நூல்கள் தொடர்பான பார்வையும் பகிர்வும் நிகழ்வு நாளை சனிக்கிழமை (09) மாலை 03 மணிக்கு யாழ்ப்பாணம் திருமறைக் கலாமன்ற கலைத்தூது அழகியல் கல்லூரியில் நடைபெறவுள்ளன.

பிரபல எழுத்தாளர் சிராஜ் மஸ்ஹூர் தலைமையில் இடம்பெறவுள்ள இந்த நிகழ்வில் நூல் நயப்புரைகளை கலாநிதி செல்வமனோகரன், கவிஞர் சிவராசா கருணாகரன், சின்னராசா விமலன், கலாநிதி குணேஸ்வரன் ஆகியோர் நிகழ்த்துவர்.

வடகோவை வரதராஜன் நூல் வெளியீட்டைத் தொடக்கி வைக்க, கௌரவ பிரதிகளை தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியின் முன்னாள் அதிபர் திருமதி சிவமலர் அனந்தசயனன் மற்றும் மருத்துவ பிரிவு முகாமையாளர் குகன்னியா நிசாந்தன் ஆகியோர் பெற்றுக் கொள்வர்.

நிகழ்வின் ஏற்புரைகளை நூலாசிரியர்களான இளவாலை விஜயேந்திரனும் சஞ்சயன் செல்வமாணிக்கமும் நிகழ்த்துவர்.



# நுகர்வோர் பாதுகாப்புச் சட்டத்தை மீறிய வர்த்தகர்களுக்குச் சிக்கல்!



(அஸ்ஹர் இப்றாஹிம்)

அம்பாறை மாவட்டத்தில் கடந்த மாதத்தில் நுகர்வோர் பாதுகாப்பு சட்டத்தை மீறி வியாபார நடவடிக்கையில் வர்த்கர்கள் ஈடுபட்டுள்ளனர். இவர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு அபராதமும் விதிக்கப்பட்டுள்ளது என்று பாவனையாளர் அலுவல்கல் அதிகார சபையின் அம்பாறை மாவட்ட பொறுப்பதிகாரி எஸ்.என்.எம்.சாலிய பண்டார தெரிவித்தார்.

அக்கரைப்பற்று, கல்முனை, சம்மாந்துறை, பொத்துவில், அம்பாறை மற்றும் தெஹியத்தக்கண்டிய ஆகிய நீதிமன்றங்களுக்கு உட்பட்ட பிரதேசங்களில் பாவனையாளர்கள் அலுவல்கள் அதிகார சபையின் திடீர் விசாரணை அதிகாரிகள் மேற்கொண்ட சுற்றிவளைப்பில் நுகர்வோர் பாதுகாப்பு சட்டத்தை மீறி வியாபார நடவடிக்கையில் ஈடுபட்டுவந்த 99 வர்த்தகர்கள் இனங்காணப்பட்டனர்.

இதில் 63 வர்த்தகர்களுக்கு எதிராக நீதிமன்றங்களில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருந்தன. இந்த வர்த்தகர்களுக்கு நீதிமன்றங்களால் ஒரு லட்சத்து 37 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டுள்ளது. ஏனைய வர்த்தகர்களுக்கு நீதிமன்றங்களால் அழைப்பாணை விடுக்கப்பட்டுள்ளது என்று பொறுப்பதிகாரி தெரிவித்தார் .

# ‘சொற்கோ. வி.என்.மதியழகன்’ நூல் வெளியீடு





(அஷ்ரப் ஏ சமத் )

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம், மற்றும் இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனம் ஆகியவற்றில் தமிழ்ப் பிரிவு பணிப்பாளராகவும் ஒலி, ஒளி செய்தி வாசிப்பாளர், தயாரிப்பாளராகக் கடமையாற்றி ஓய்வுபெற்ற வி.என்.மதியழகனின் “சொற்கோ. வி.என்.மதியழகன்” தமிழ் ஒலிபரப்பில் சொற்காலப் பதிவு எனும் நூல் வெளியீட்டு விழா நேற்று முன்தினம் புதன்கிழமை (06) கொழும்பு தமிழ் சங்கத்தில் இலங்கை தமிழ் ஊடக வியலாளர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் அதன் தலைவர் ஆனந்த பாலகிட்னர் தலைமையில் நடைபெற்றது.

நூலின் முதற்பிரதியை நூலசிரியரிடம் இருந்து இலக்கியப் புரவலர் ஹாசீம் உமர் பெற்றுக் கொண்டார். அத்துடன் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் கடமையாற்றும் சிரேஷ்ட ஊடகவியலாளர்கள் மற்றும் ஓய்வு பெற்ற ஊடகவியலாளர்கள் இணைந்து “சொல்லாயன்” எனும் பட்டத்தை வி.என். மதியழகனுக்கு வழங்கிக் கௌரவித்தனர்.

நிகழ்வில் முன்னாள் ஆளுநர் கே.சி. லோகேஸ்வரன், அகில இலங்கை இந்து மாமன்ற தலைவர் தவயோக ராஜா, பேராசிரியர் துறைமனோகரன், ஆங்கில ஒளி, ஒலி பரப்பாளர் அருண் டயஸ் பண்டாரநாயக்க, வீரகேசரி ஆசிரியர் எஸ். ஸ்ரீகஜன், தினகரன் ஆசிரியர் செந்தில் வேலவர், சிரேஷ்ட ஒலி. ஒளிபரப்பாளர்கள் இளைய தம்பி தயானாந்தா, எஸ்.விஸ்வநாதன், சிவரஞ்சன் யோகராஜ், எம்.இசட் அஹமத் முனவர், கவிஞர் ரபீக், நூல் விமர்சனத்தை சாகித்தியரத்னா தி. ஞானசேகரன் நிகழ்த்தினார்.



# மட்டக்களப்பில் அரங்கேறிய தென்றலின் பெருவிழா!



**(பழுவூரான்)**

மட்டக்களப்பு கல்லடியிலிருந்து காலாண்டுச் சஞ்சிகையாக கடந்த 15 ஆண்டுகளாக வெளிவந்து கொண்டிருக்கும் “தென்றல்” சஞ்சிகையின் 60 ஆவது இதழ் வெளியீடு மட்டக்களப்பு மகாஜனாக் கல்லூரி கேட்போர் கூடத்தில் கடந்த சனிக்கிழமை (02) இடம்பெற்றது.

தென்றல் சஞ்சிகை ஆசிரியர் கதிரேசபிள்ளை கிருபாகரன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், கிழக்கு மாகாண பொதுச் சேவை ஆணைக்குழு செயலாளர் எம். கோபாலரெத்தினம் பிரதம அதிதியாகவும், மட்டக்களப்பு மாவட்ட மேலதிக அரச அதிபர் சுதர்சினி ஸ்ரீகாந்த் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொண்டனர்.

தென்றல் சஞ்சிகை ஆசிரியர் கதிரேசபிள்ளை கிருபாகரனால் 60 ஆவது இதழின் முதல் பிரதியை மட்டக்களப்பு தமிழ்ச்சங்கத் தலைவர் விநாயகமூர்த்தி றஞ்சிதமூர்த்திக்கு வழங்கி வைத்தார். அதனைத் தொடர்ந்து அவர் சிறப்பு, கௌரவப் பிரதிகளை “வீசுதென்றல் விருது” பெற்ற கலைஞர்கள், எழுத்தாளர்கள் மற்றும் ஊடகவியலாளர்களுக்கு வழங்கினார்.

தொடர்ந்து “வீசுதென்றல் விருது” மற்றும் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

நிகழ்வில் விருது பெற்ற கலைஞர் சார்பில் கதிரவன் த.இன்பராசா பாராட்டுரையையும், “தென்றல்” சஞ்சிகை ஆசிரியர் பீட உறுப்பினர் த.செல்வராணி நன்றியுரையையும் வழங்கினர். இந்த நிகழ்வுகளைச் சிரேஷ்ட ஊடகவியலாளர் பெ.ஹரிச்சந்திரா தொகுத்து வழங்கினார்.

இந்த நிகழ்வில் மட்டக்களப்பு மாவட்ட கலாசார இணைப்பாளர் த.மலர்ச்செல்வன், மண்முனை வடக்கு பிரதேச செயலக கலாசார உத்தியோகத்தர் வளர்மதிராஜ், பேராசிரியர் செ.யோகராசா உட்படப் பலர் கலந்து கொண்டனர்.









# நல்லூரில் தெய்வீகத் கூட்டம் 18 ஆம் நாள் நிகழ்வுகள்

இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களம், நல்லூர் உற்சவ காலத்தை முன்னிட்டு நடத்தும் தெய் வீகத் திருக்கூட்டத் தொடர் நிகழ்வின் 18 ம் நாள் நிகழ்வு நேற்று (07) வியாழக் கிழமை யாழ். மாவட்ட செயலக பிரதம கணக்காளர் என். எஸ். இராமநாதன் சிவரூபன் தலைமையில் நல்லை திரு ஞானசம்பந்தர் ஆதீனக் கலா மண்ட பத்திலே இடம் பெற்றது.

தெல்லிப்பளை துர்க்காதேவி தேவஸ்தான தலைவர் செஞ்சொற் செல்வர் கலாநிதி ஆறு திருமுருகன் அவர்கள் பிரதம அதிதியாகவும், மாகாண கல்வித் திணைக்கள ஓய்வு பெற்ற உதவி கல்வி பணிப்பாளர் ச.கைலாசநாதன் அவர்கள் சிறப்பு அதிதியாகவும் கலந்து கொண்டனர்.







# வரவு - செலவில் மாற்றம் தேவை!

**இல்லையேல் போராட்டம் வெடிக்கும் என்கிறார் அனைத்துப் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கங்களின் உப தலைவர் அகிலன் கதிர்காமர்**



வரவு - செலவுத் திட்டத்தில் மாற்றம் வராவிட்டால் பல்கலைக்கழக ஆசிரியர்களும் தொழிற்சங்கங்களும் இணைந்து பாரிய போராட்டத்தை மேற்கொண்டு அரசின் கொள்கைகளில் மாற்றம் கொண்டு வர முயற்சிப்போம்.

அனைத்து பல்கலைக்கழக ஆசிரியர் சங்கங்களின் உப தலைவர் கலாநிதி அகிலன் கதிர்காமர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இந்தச் சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு–

தற்போது இருக்கின்ற நாட்டினுடைய சூழல், பல்கலைக்கழக ஆசிரியர்களுடைய நிலைமை மற்றும் கல்வித்துறை சம்பந்தமான பல விடயங்களை ஆராய்ந்து தற்போது போராட்டம் ஒன்றை முன்னெடுக்கும் நிலைமை ஏற்பட்டிருக்கிறது.

கடந்த இரு வருடங்களாக இந்த பாரிய பொருளாதாரம் நெருக்கடியுடன் எங்களுடைய உறுப்பினர்களாக இருக்கும் பல்கலைக்கழக ஆசிரியர்கள் பல சிரமங்களுக்கு உட்படுத்தப்பட்டிருக்கிறார்கள். அவர்களுடைய வரி பெருமளவில் அதிகரிக்கப்பட்டிருக்கிறது. அவர்கள் வேலை செய்யும் இடங்களில் போதிய அளவு வளங்கள் இல்லை. இதே நிலைமைதான் இலங்கையில் உள்ள அனைத்து மக்களும் முகம் கொடுக்கும் நிலைமையாக இருக்கிறது.

வாழ்க்கைச் செலவினுடைய அதிகரிப்பு வரிகளுடைய அதிகரிப்பு, இந்த நிலைமையில் அரசிடமிருந்து விதமான உதவிகளும் காண முடியாத நிலை இருக்கிறது. எதிர்வரும் வரவு செலவுத் திட்டத்தில் பாரிய மாற்றம் தேவை என்பது எங்களுடைய கருத்து.

முக்கியமாக கல்வித்துறை சார்ந்த கொள்கைகளை எடுத்துப் பார்க்கின்ற போது பெரும் குறைபாடுகள் காணப்படுகின்றன.

பொருளாதார நிலைமை என்று பார்க்கும் போது மிகவும் குறைபாடாக இருக்கிறது. மக்களுடைய நிலைமையை கருதாமல் வெறுமனே சர்வதேச நாணய நிதியத்தினுடைய கொள்கைகளையும், அதனுடைய இலக்குகளையும் வைத்துக் கொண்டுதான் பொருளாதாரக் கொள்கைகளை அணுகிக் கொண்டிருக்கின்றார்கள்.

குறிப்பாக மின்சாரம், எரிபொருள் விலை அதிகரிப்பு மற்றும் அரசமைப்புகளைத் தனியார் மயமாக்கும் நிலைப்பாடு வரவு - செலவுத் திட்டத்தில் ஒரு சிக்கன அடிப்படையில் செலவுகளை குறைத்து பொது சேவைகளைச் சீர்குலைக்கும் நிலைமை தற்போது காணப்படுகிறது.

தற்போதைய நிலையில் முக்கியமான விடயம், இரண்டு மாதத்துக்கு முன்பு உள்நாட்டு கடன் மறுசீரமைப்பு என்னும் கொள்கை மத்திய வங்கியால் முன்வைக்கப்பட்டது. அரசும் ஏற்றுக் கொண்டிருக்கிறது, அதன் அடிப்படையில் மக்களினுடைய ஈ.ரி.எவ். நிதி அடுத்த 16 வருடங்களில் ஏறத்தாழ 47 வீதத்தால் குறையப் போகின்றது. இது மிகவும் ஒரு பின்னடைவாக இருக்கும். எங்களுடைய பல்கலைக்கழக ஆசிரியர்களுடைய யு.பி.எப். கூட 40 விகிதத்தால் குறைய கூடிய வாய்ப்பு உண்டு.

இவைகள் எங்களுடைய அரசின் கொள்கைகளைக் கேள்விக்கு உட்படுத்தும் ஒரு விடயமாக இருக்கிறது. இதற்கு எதிராகவும் எங்களுடைய அனைத்து பல்கலைக்கழக ஆசிரியர் சம்மேளனம் ஏனைய தொழிற்சங்களுடன் இணைந்து கடைசி சில வாரங்களாக சில போராட்டங்களை கொழும்பில் மேற்கொண்டு இருக்கிறது.

கடந்த ஐந்து வருட காலத்திலும் எங்களுடைய மாணவர்களுடைய உள்வாங்கும் தொகை 29 ஆயிரம் தொடக்கம் 43 ஆயிரமாக அதிகரித்திருக்கிறது. அதாவது ஏறத்தாழ 50 வீதத்தால் அதிகரிக்கப்பட்டு இருக்கிறது. ஆனால் இந்த 17 பல்கலைக்கழகங்களுக்கான அரசினுடைய முதலீட்டு செலவு 0.16 - 0.08 விகிதமாக 50 விகிதத்தால் குறைக்கப்பட்டிருக்கிறது. அதாவது மாணவர்களுடைய தொகை 50 வீதத்தால் அதிகரிக்கப்பட்டு இருக்கிறது.

ஆனால் பல்கலைக்கழகங்களுடைய முதலீட்டு செலவுக்கான ஒதுக்கீடு 50 வீதத்தால் குறைக்கப்பட்டிருக்கிறது. இவ்வாறான கொள்கைகளைத் தான் இந்த அரசும் முன்கொண்டு போகிறது.

இந்த வரவு, செலவுத் திட்டத்தில் பெரும் மாற்றம் வராவிட்டால் பல்கலைக்கழக ஆசிரியர்களும் தொழிற்சங்கங்களும் இணைந்து ஒரு பெரிய போராட்டத்தை மேற்கொண்டு கொள்கைகளில் மாற்றம் கொண்டு வர முயற்சிப்போம் என்பதைத் தெரியப்படுத்துகின்றோம். –என்றார்.

# கிழக்கு உதைபந்தாட்டப் போட்டியில் காத்தான்குடி மத்தி இறுதிப் போட்டிக்கு!



**(அஸ்ஹர் இப்றாஹிம்)**

கிழக்கி மாகாண மட்ட பாடசா லைகளுக்கிடையிலான உதைபந்தாட் டப் போட்டியில் காத்தான்குடி மத்திய கல்லூரி அணி இறுதிப் போட்டிக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

கிழக்கு மாகாண மட்ட பாடசாலை களுக்கிடையிலான உதைப்பந்தாட்டப் போட்டியின் அரை இறுதிப் போட்டி அண்மையில் இடம்பெற்றது.

அரை இறுதிப் போட்டியில் கிழக்கின் பலம் பொருந்திய கிண்ணியா மத்திய கல்லூரி அணியும், காத்தான்குடி மத்திய கல்லூரி அணியும் பலப்பரீட்சையில் ஈடுபட்டன.

இரண்டு அணிகளும் எதுவித கோல்களையும் புகுத்தாத நிலை யில் போட்டி சமநிலையில் முடிவுற் றது.

வெற்றி தோல்வியை தீர்மானிப்ப தற்காக மத்தியஸ்தர்களால் தண்டனை உதை வழங்கப்பட்டது.

இதில் காத்தான்குடி மத்திய கல் லூரி அணி 4:3 என்ற கோல் அடி-ப்படையில் வெற்றி கொண்டு இறு திப் போட்டிக்குத் தெரிவு செய்யப் பட்டுள்ளது.

## ரணி மத்திய கல்லூரி மாணவி கலைப் பிரிவில் மாவட்டத்தில் முதலிடம்



**(த.சுபேசன்)**

தென்மராட்சி கல்வி வலயததுக்கு உட்பட்ட வரணி மத்திய கல்லூரி மாணவி ஆர்.சுவர்க்கா உயர்தரப் பரீட்சையில் கலைப் பிரிவில் 3 ஏ பெறுபேற்றைப் பெற்று யாழ். மாவட்ட மட்டத்தில் முதலாம் இடத்தைப் பெற்றதுடன் அகில இலங்கை ரீதியில் 36 ஆவது இடத்தையும் பெற்றுள்ளார்.

இவர் கலைப்பிரிவில் தமிழ், வரலாறு மற்றும் புவியியல் ஆகிய பாடங்களில் தோற்றியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ‘ஜெயவிம’ திட்டத்தில் வீடு காரைதீவில் கையளிப்பு





**(நூருல் ஹுதா உமர் )**

காரைதீவு பிரதேச செயலர் பிரிவில் சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத் தால் புனரமைப்புச் செய்யப்பட்ட வீடு கையளிக்கப்பட்டுள்ளது.

2023 ஆம் ஆண்டில் நடை முறைப்படுத்தும் அரச பங்களிப்புடன் 2 லட்சத்து 50 ஆயிரம் ரூபா செல வில் புனர்நிர்மானம் செய்யப்பட்ட வீடு காரைதீவு பிரதேச செயலர் சிவஞானம் ஜெகராஜால் நேற்றுத் திறந்து வைக் கப்பட்டு பயனாளியிடம் கையளிக்கப் பட்டது.

இந்த நிகழ்வில் உதவிப் பிரதேச செயலாளர் எம். பார்த்திபன், சமுர்த்தி முகாமையாளர்கள் மற்றும் காரைதீவு பிரதேச செயலக உத்தியோகத்தர்களும் கலந்து கொண்டனர்.

# நடிகர் மாரிமுத்து காலமானார்: அதிர்ச்சியில் தமிழ் திரையுலகம்!



பிரபல நடிகர் மாரிமுத்து இன்று காலை மாரடைப்பால் காலமானார். அவருக்கு வயது 56.

'எதிர்நீச்சல்' தொலைக்காட்சி தொடரில் ஆதிகுணசேகரன் என்ற கதாபாத்திரத்தில் நடித்து மாரிமுத்து பிரபலமானவர். இந்த தொடரில் இவர் பேசும் வசனங்கள் சமூக வலைதளங்களில் வைரலாகின. இவர் தொடர்பான மீம்கள் கடந்த சில தினங்களுக்கு முன்பு பிரபலமானது.

இதற்கு முன்பே இவர் பல்வேறு திரைப் படங்களில் முக்கிய கதாபாத்திரங்களில் நடித்திருந்தார். 'கண்ணும் கண்ணும்', 'புலிவால்' உள்ளிட்ட படங்களை இயக்கியும் உள்ளார்.

'பரியேறும் பெருமாள்' படத்தில் கதாநாயகியின் தந்தையாக நடித்த இவரது கதாபாத்திரம் பேசப்பட்டது. சமீபத்தில் ரஜினி நடிப்பில் வெளியான 'ஜெயிலர்' படத்தில் ஒரு முக்கிய கதாபாத்திரத்தில் நடித்திருந்தார்.

இந்த நிலையில் இன்று காலை 8.30 மணியளவில் 'எதிர்நீச்சல்' தொடருக்காக பின்னணி குரல் பேசிக் கொண்டிருந்த மாரிமுத்து திடீரென மயக்கம் போட்டு விழுந்தார் என கூறப் படுகிறது.

அங்கிருந்தவர்கள் உடனடியாக அருகில் உள்ள மருத்துவமனைக்கு கொண்டு சென்றபோது, அவர் மாரடைப்பு ஏற்பட்டு ஏற்கெனவே இறந்துவிட்டார் என மருத்துவர்கள் கூறியுள்ளனர்.

இன்று மாலை அவரது உடல் அவரது சொந்த ஊரான தேனி மாவட்டம் பசுமலை கிராமத்துக்கு கொண்டு செல்லப்படுகிறது.

சமீபத்தில் அவரது நேர்காணல்கள், பேச்சுகள் சமூக வலைதளங்களில் வைரலான நிலையில் அவரது இறப்புச் செய்தி ரசிகர்கள் மத்தியில் அதிர்ச் சியை ஏற்படுத்தியுள்ளது. அவரது மறைவுக்கு பலரும் இரங்கல் தெரிவித்து வருகின் றனர்.

## தேர்தல் பணியை துரிதப்படுத்துங்கள்: கமல் அறிவுறுத்தல்



தேர்தல் பணியைத் துரிதப்படுத்த வேண்டும் என மக்கள் நீதி மய்யம் கட்சியினருக்கு அதன் தலைவர் கமல்ஹாசன் அறிவுறுத்தியுள்ளார்

படப்பிடிப்பு தொடர்பாக அமெரிக்கா சென்றிருந்த மக்கள் நீதி மய்யம் கட்சித் தலைவர் கமல்ஹாசன், கடந்த 4 ஆம் திகதி சென்னை திரும்பினார். நேற்று முன்தினம் கட்சி நிர்வாகிகளை அவர் சந்தித்துப் பேசினார்.

சென்னை ஆழ்வார்பேட்டையில் உள்ள கட்சி தலைமையகத்தில் இடம்பெற்ற இந்த சந்திப்பில், கட்சியின் பொதுச்செயலாளர் ஆ.அருணாச்சலம் உள்ளிட்ட முக்கிய நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

இந்த கூட்டத்தில் கமல்ஹாசன் உரையாற்றுகையில், மக்களவைத் தேர்தலுக்கு இன்னும் 200 நாட்களே உள்ளன. இதனால் தேர்தலுக்கான பணிகளைத் துரிதப்படுத்த வேண்டும்.

அனைத்து நிர்வாகிகளுக்கும் வழங்கப்பட்ட வேலையைத் திறம்பட செய்து முடிக்க வேண்டும். தங்களுக் கான பொறுப்பை உணர்ந்து செயல்பட வேண்டும். கூட்டணி தொடர்பான விஷ யங்களை நான் பார்த்துக் கொள் கிறேன் என்று தெரிவித்துள்ளார்.

## கட்டாயப்படுத்தி 7 முறை கருக்கலைப்பு: நடிகை விஜயலட்சுமிக்கு பரிசோதனை



கட்டாயப்படுத்தி 7 முறை கருக்கலைப்பு செய்தார் என சீமான் மீது நடிகை விஜயலட்சுமி புகார் அளித்திருந்தார். இந்த நிலையில், விஜயலட்சுமிக்கு நேற்று மருத்துவப் பரிசோதனை நடைபெற்றது.

நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் மீது, நடிகை விஜயலட்சுமி கடந்த 28 ஆம் திகதி பொலிஸ் ஆணையர் அலுவலகத்தில் புகார் அளித்தார்.

அந்த புகாரில் , 'மதுரை மீனாட்சி அம்மன் கோயிலில் சீமான் என்னை திருமணம் செய்துகொண்டார். நாங்கள் கணவன், மனைவியாக வாழ்ந்தோம். இதை வெளியே சொல்ல வேண்டாம் என்று அவர் கேட்டுக் கொண்டதால், நான் யாரிடமும் கூறவில்லை. அடுத்தடுத்து 7 முறை கர்ப்பமானேன். எனது அனுமதி இல்லாமலேயே, அவர் மாத்திரை மூலம் கருச்சிதைவு செய்தார்.

மேலும், நான் சினிமாவில் நடித்து சேமித்து வைத்திருந்த 60 லட்சம் ரூபா பணம் மற்றும் 35 லட்சம் ரூபா மதிப்பிலான நகைகளையும் பெற்றுக் கொண்டார். இந்த நிலையில், அவர் எனக்குத் தெரியாமல் வேறு ஒரு பெண்ணைத் திருமணம் செய்து கொண்டார்.

இதுதொடர்பாக அவர் மீது வளசர வாக்கம் பொலிஸ் நிலையத்தில் நான் அளித்த புகார் தொடர்பாக சீமான் மீது 2011 இல் வழக்கு பதிவு செய்யப்பட்டது.

இந்த நிலையில், சீமான் கட்சியை சேர்ந்த மதுரை செல்வம் என்பவர் என்னை மிரட்டுகிறார். எனவே, என் வயிற்றில் இருந்த கருவை எனது அனுமதியின்றி கருச்சிதைவு செய்ததுடன், பணம், நகைகளை பறித்துக் கொண்டு, தற்கொலைக்கு தூண்டி, என் வாழ்க்கையைச் சீரழித்த சீமான் மீதும், அவரது தூண்டுதலின்பேரில் மிரட்டும் மதுரை செல்வம் மீதும்நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தெரிவித்திருந்தார்.

இந்நிலையில், நேற்று காலை நடிகை விஜயலட்சுமியை பொலிஸார் மீண்டும் அழைத்து, சென்னை கீழ்ப்பாக்கம் அரசு மருத்துவமனையில் சுமார் 2 மணி நேரம் மருத்துவப் பரிசோதனை நடத்தினர்.

இதுகுறித்து பொலிஸார் தெரிவிக்கையில் சீமான் தன்னை 7 முறை கட்டாயக் கருக்கலைப்பு செய்தார் என விஜயலட்சுமி புகார் தெரிவித்துள்ளார். இதன் உண்மைத் தன்மைக்காக தற்போது மருத்துவப் பரிசோதனை நடத்தப்படுகிறது என்று தெரிவித்துள்ளனர்.

விஜயலட்சுமி விவகாரத்தில் அடுத் தடுத்த நடவடிக்கைகளால் சீமானுக்கு நெருக்கடி ஏற்பட்டிருக்கிறது என கூறப்படுகிறது. விஜயலட்சுமி அளித்துள்ள புகார், அரசியல் வட்டாரத்தில் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

# மாலியில் தீவிரவாதிகள் தாக்குதல்: இராணுவத்தினர் உட்பட 64 பேர் பலி!





மேற்கு ஆப்பிரிக்க நாடான மாலியின் வடகிழக்கு பகுதியில் பயங்கரவாதிகள் மேற்கொண்ட தாக்குதலில் 64 பேர் உயிரிழந்துள்ளனர்.

குறித்த பகுதியில் பொது மக்கள் பயணித்த படகு ஒன்றின் மீது நடத்தப்பட்ட தாக்குதலில் 49 பேர் கொல்லப்பட்டனர் என அந்த நாட்டு இடைக்கால அரசாங்கம் அறிவித்துள்ளது.

அத்துடன், பயங்ரவாதிகளால் இராணுவ முகாம் ஒன்றின் மீதும் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. இந்த தாக்குதலில் 15 இராணுவ உத்தியோகத்தர்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

அதேநேரம் மாலி பாதுகாப்பு தரப்பினர் நடத்திய தாக்குதலில் சுமார் 50 பயங்கரவாதிகள் கொல்லப்பட்டுள்ளனர் என தெரிவிக்கப்படுகிறது. இந்தநிலையில் மாலியில் மூன்று நாட்கள் தேசிய துக்க தினங்களாக பிரகடனப்படுத்தி அந்த நாட்டு அரசாங்கம் அறிவித்துள்ளது.

## வடகொரியாவினால் தயாரிக்கப்பட்டுள்ள அணுவாயுதங்களை கொண்ட நீர்மூழ்கி!



வடகொரியாவினால் தயாரிக்கப் பட்டுள்ள அணுவாயுதங்களை கொண்ட நீர் மூழ்கி கப்பல் தொடர்பான தகவல்கள் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

வடகொரியாவில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் குறித்த நீர் மூழ்கி கப்பல் வெளிப்படுத்தப்பட்டது என அந்த நாட்டு அரச ஊடகம் தெரிவித்துள்ளது.

வட கொரியா உருவாக்குவதற்கு விரும்பும் ஆயுதங்களின் பட்டியலில் நீண்டகாலமாக அணுசக்தி தாக்குதல் திறன் கொண்ட நீர் மூழ்கி கப்பலும் உள்ளது.

இந்தநிலையில் குறித்த நீர் மூழ்கி கப்பலின் படங்களை வடகொரியா நேற்று வெளியிட்டுள்ளது.

எனினும் குறித்த நீர் மூழ்கி கப்பல் இதுவரையில் பரிசோதனைக்கு உட்படுத் தப்படவில்லை என சர்வதேச ஊடகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

## ஜி-20 மாநாட்டில் ஸ்பெயின் ஜனாதிபதி பங்கேற்க மாட்டார்!



டில்லியில் நடைபெறும் ஜி-20 உச்சி மாநாட்டில் ஸ்பெயின் ஜனாதிபதி பெட்ரோ சான்செஸ் பங்கேற்க மாட்டார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

ஜி-20 அமைப்புக்கு இம்முறை இந்தியா தலைமை தாங்கியுள்ளது.

இந்த நிலையில், ஸ்பெயினின் ஜனாதிபதி பெட்ரோ சான்செஸ், இந்தியாவிற்கு வருகை தர இருந்த நிலையில், அவருக்கு கொரோனா தொற்று ஏற்பட்டிருப்பது மருத்துவ பரிசோதனையில் கண்டறியப்பட் டுள்ளது.

இதனால் டில்லியில் நடைபெறும் ஜி-20 உச்சி உச்சிமாநாட்டில் அவர் பங்கேற்க மாட்டார் என அறிவிக்கப் பட்டுள்ளது.

## தாயை நினைவு கூர்ந்தார் பிரித்தானிய மன்னர் சார்லஸ்!

பிரித்தானிய மகாராணி 2 ஆம் எலிசபெத் உயிரிழந்து இன்றுடன் ஒருவருடம் பூர்த்தியாகின்றது. சுமார் 70 ஆண்டுகளாக பிரித்தானியாவின் மகாராணியாகத் திகழ்ந்து வந்த அவர் கடந்த ஆண்டு, தனது 96 ஆவது வயதில் உடல் நலக்குறைவு ஏற்பட்டு உயிரிழந்தார்.

இதனையடுத்து பிரித்தானியாவின் மன்னராக ராணி எலிசபெத்தின் மகனான மூன்றாம் சார்லஸ் கடந்த மே மாதம் 6 ஆம் திகதி முடிசூடிக்கொண்டனர்.

இந்த நிலையில் மன்னர் சார்லஸ் தனது தாயின் நினைவு நாளான இன்று அவரை நினைவுகூர்ந்துள்ளார். அத்துடன் கடந்த 1968 ஆம் ஆண்டு எடுக்கப்பட்ட ராணியின் புகைப்படமொன்றையும் வெளியிட்டுள்ளார்.

அத்துடன், பிரித்தானிய மக்கள், இந்த ஆண்டு எனக்கும் எனது மனைவிக்கும் காட்டிய அன்பு மற்றும் ஆதரவிற்காக நான் மிகவும் நன்றியுள்ளவனாக இருக்கிறேன்,

உங்கள் அனைவருக்கும் என்னால் முடிந்த அனைத்து சேவையையும் செய்வேன் எனவும் மன்னர் சார்லஸ் தெரிவித்துள்ளார்.



# ஒரே இரவில் இரு சம்பியன் கிண்ணங்களை வசப்படுத்தியது ஆவரங்கால் இந்து இளைஞர்









யாழ். மாவட்ட கரப்பந்தாட்ட சங்கத்தின் அனுமதியுடன் புத்தூர் கலைமதி விளையாட்டுக்கழகம் நடாத்திய கரப்பந்தாட்டத் (செற்–அப்) தொடரில் 'ஏ', 'பி' என இரு பிரிவுகளிலும் ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக் கழகம் சம்பியனானது.

நேற்று (07) இரவு புத்தூர் கலைமதி விளையாட்டுக் கழக மைதானத்தில், 'ஏ', 'பி' பிரிவு அணிகளுக்கான இறுதி யாட்டங்கள் நடைபெற்றன.

இதில் முதலில் நடைபெற்ற 'பி' பிரிவு இறுதிப்போட்டியில் யாழ். பல்கலைக்கழக அணியை எதிர்த்து ஆடிய ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக் கழக 'பி' அணி, 3:0 என்ற சுற்றுக் கணக்கில் வெற்றியைத் தனதாக்கி சம்பியனானது.

இந்த ஆட்டத்தின் நாயகனாக இந்து இளைஞரின் விதுசன் தெரிவு செய்யப்பட்டார்.

பின்னர் நடைபெற்ற 'ஏ' பிரிவுக்கான இறுதியாட்டத்தில் ஆவரங்கால் மத்திய விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து ஆவரங்கால் இந்து இளைஞர் விளை யாட்டுக் கழகம் மோதியது.

இந்த ஆட்டத்தில் இந்து இளைஞர் விளையாட்டுக் கழகம் 3:1 என்ற சுற்றுக் கணக்கில் வெற்றிபெற்று சம்பியானது.

இந்த ஆட்டத்தின் நாயகனாக இந்து இளைஞரின் ஜனன் தெரிவானார். மக்கள் மனம் கவர்ந்த வீரராகவும் அவரே தெரிவா னார். தொடராட்ட நாயகனாக இந்து இளைஞரின் லக்ஷி தெரிவானார். சிறந்த செற்றராக இந்து இளைஞரின் நிதர்ஷி தெரிவாக, அதே அணியைச் சேர்ந்த சஞ்சை சிறந்த சேவிஸராகத் தெரிவானார்.

